## பட்டுக்கோட்டை நகராட்சி
## திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழஙகப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச்செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருஙகிணைந்து கழிவுகளை கண்ட இடஙகளில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி தனிநபர் குடியிருப்பு, வணிக வளாகஙகள், உணவு விடுதிகள், சிற்றுண்டி சாலை, மருத்துவமனைகள், மொத்த வணிகர்கள், சில்லரை வணிகர்கள் மற்றும் அனைத்து வணிகர்கள் உட்பட அனைவரும் பட்டுக்கோட்டை நகராட்சியை தூய்மையான நகராட்சி பகுதியாக்க திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி திடக்கழிவுகளை மேலாண்மை செய்தல் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016ன் பிரிவு 4ன்படி கழிவை உருவாக்குபவர் அதனை குப்பையாக வெளியே போடுவதை தவிர்க்கும் பொறுப்புடையவராவர் அவர் அதிகார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட சேகரித்தல் மற்றும் பிரித்தல் முறைக்கு இணஙகி கழிவை ஒப்படைப்பு செய்ய உறுதி செய்ய வேண்டியவராவார்.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச்சுழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல், சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடை செய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தஙகு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி நகர்மன்றம் ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு

தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழஙகப்படுகிறது.

பட்டுக்கோட்டை <u>**நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள்,தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது.**</u>

1.0 **தலைப்பு(Title)** : இது பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 என்று

அழைக்கப்படும்.

2.0 **செயல்பாடு எல்லை (Extent of application:-** இந்தத் துணைவிதிகள் பட்டுக்கோட்டை நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பொது இடஙகளுக்கும் மற்றும் நகரத் திடக் கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகஙகளுக்கும் பொருந்தும்.

3.0 **வரையறை(Definition):-** இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் வெளிப்பாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே பட்டுக்கோட்டை நகராட்சி சட்ட <u>**(மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920)**</u> த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும் கீழ்கண்ட சொற்களின் பொருள்கள் இஙகுப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

1. **காற்றுள்ள உரமாக்கல் (Aerobic Composting)** :- ஆக்ஸிஜன் துணை கொண்டு அஙகக நுண்ணுயிரியல் சிதைவு முறையில் கட்டுப்படுத்தப்பட்ட செயலாக்கம்.
2. **காற்றுப்புகா செரிமானம் (Anaerobic Digestion):-** ஆக்ஸிஜன் இல்லாத உயிர்ம நுண்ணுயிர் சிதைவு முறையில் கட்டுப்படுத்தப்பட்ட செயலாக்கம்.
3. **அஙகீகாரம் (Authorization):-** மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாசுக்கட்டுப்பாட்டு குழு நகர்புற உள்ளாட்சி அமைபிற்கு திடக்கழிவு அகற்றல் மற்றும் செலாக்கம் செய்ய அனுமதி அளித்தல்.
4. **மக்கும் குப்பை (Bio-degradable waste) :-** என்பதன் பொருள் நகராட்சி திடக் கழிவு (MSW) வில் பொதுவாகக் காணப்படும் குப்பை. இது ஈரமான கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு பொதுவாகத் தாவரம் அல்லது விலஙகு ஆதாரஙகளில் இருந்து உருவாகும் கழிவு ஆகும். இக்கழிவுகள் பிற வாழும் உயிரினஙகளால் மக்கும் தன்மையனவாய் இருக்கும். இது காய்கறிக் கழிவுகள், உணவுக் கழிவுகள், தோட்டக் கழிவுகள், தேஙகாய் ஓடுகள், மரத் துண்டுகள், நகம், முடி, முட்டை ஓடுகள், எலும்பும் சதையும் பயன்படுத்தப்பட்ட

பருத்தி, காகிதம், போன்றவற்றை உள்ளடக்கியது. பிற உயிர் மக்கும் குப்பைகள் மனிதக் கழிவு, விலஙகுக் கழிவு, கழிவுநீர், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் முதலியன.

5. **உயிரிமீத்தேனாக்கம் (Bio-Methanation):–** உயிர்பொருள்களை நொதித்தல் சிதைவு வழி நுண்ணுயிர் நடவடிக்கைக்கு வகை செய்து மீத்தேன் அதிகமாக இருக்கும் உயிர்வாயு உருவாக்கும் செயல்முறை ஆகும்.

6. **அஙகீகரிக்கப்பட்ட உரிமையாளர் (Brand Owner):–** பதிவு செய்யப்பட்ட சின்னத்தின் கீழ் அல்லது பெயரின் கீழ் பொருள்கள் விற்கும் நபர் அல்லது நிறுவனம்.

7. **பெருமளவு கழிவுகள் தோற்றுவிக்கப்படுவர்/ஏற்படுத்துபவர்:–** ( Bulk Waste Generator) :: நாளொன்றிற்கு 100 கிலோவிற்கு மேல் குப்பைகள் உற்பத்தி செய்யும் வீட்டுச்சமூகம் / வீட்டு வளாகஙகள் உணவகஙகள், விடுதிகள் , சந்தைகள், தொழிற்பேட்டைகள், கடை வளாகஙகள்/ விற்பனையகஙகள், அரசு அல்லது பொது கட்டடஙகள் அல்லது மன்றம், உடற்பயிற்சிப் போட்டிக்களம், திருமண மண்டபஙகள், மனமகிழ்மன்றம்/ கேளிக்கை மன்றம் போன்றனவற்றுடன் பிற பயன்பாட்டிற்கு என்று தொடர்புடைய, ஆணையாளரால் அடையாளம் கண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரம்/ வளாகஙகள்

8. **துணைவிதிகள் (By- Laws):–** உள்ளாட்சி அமைப்புகள் தஙகள் எல்கைக்குள் விதிகளை திறம்பட செயல்படுத்த எளிதாக்கும் கட்டுபாட்டு கட்டமைப்பு.

9. **எளிதில் தீப்பிடிக்கும் கழிவு (Compusitible Waste): –**மறுசுழற்சி செய்ய இயலாத மக்காத தன்மையுடைய மறுபயன்பாடு செய்ய இயலாத, அபாயகரமான திடக்கழிவு அல்லாத குறைத் பட்ச கலோரிபிக் மதிப்பு 1500 கி.க/கி உடைய பிளாஸ்டிக், மரக்கூழ் மற்றும் குளோரின் பொருள்கள் தவிர்த்த கழிவுகள்.

10. **உரமாக்கல் (Composting) :** உயிர்மப் பொருளை நுண்ணுயிர் சிதைவுக்கு உட்படுத்திச் செய்யும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செயலாக்கம், இது புழுக்களைப் பயன்படுத்தி மக்கச் செய்வதையும் உள்ளடக்கியது. அதாவது மண்புழுக்களைப் பயன்படுத்தி உயிர் மக்கும் கழிவுகளை மக்கிய உரமாக மாற்றும் ஒரு செயலாக்கமாகும்.

11. **இணை செயலாக்கம் (Co- Processing):-** மறுசுழற்சி செய்ய இயலாத மக்காத தன்மையுடைய மறுபயன்பாடு செய்ய இயலாத, அபாயகரமான திடக்கழிவு அல்லாத 1500 கி.க/கி கலோரிபிக் மதிப்பு உடைய மூல எரிசக்தி அல்லது இரண்டும் சேர்த்து அல்லது இயயற்கை கனிம வளத்திற்கு துணையாக தொழிற்துறையில் பயன்படுத்தப்படுவது.

12. **பரவாலாக்கப்பட்டசெயலாக்கம் (Decentralized Processing):-** மக்கும் குப்பைகள் மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை செயலாக்கம்.

13. **பாதுகாப்பாக அகற்றுதல் (Disposal):-** திடக்கழிவு செயலாக்கத்திற்கு பிறகு எஞ்சியவை மற்றும் தெரு பெருக்குவதால் உருவாகும் கழிவுகள் நிலத்தடி நீர் , மேற்பரப்பு நீர் சுற்றுப்புறம் மற்றும் காற்று ஆகியவை மாசு அடையாதவகையில் பாதுகாப்பாக அகற்றுதல்.
14. **அபாயகரமான வீட்டுக் கழிவுகள் (DHW) :** பொதுவான வீட்டு வேதியல் பொருள்கள் மற்றும் உரிமையாளர்க்கு இனி பயன்படாத கழிவு பொருள்கள் ஆகியவை உள்ளிட்ட அபாயகரமான கழிவுகள்,எதிர்வினைத் தன்மை, பற்றி எரியும் தன்மை, அரிக்கும தன்மை, நச்சுத்தன்மை, அழியாமல் இருக்கும் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய வரையறுக்கப்பட்ட அபாயகரமான கழிவுகள் விளைவிக்கும் ஆபத்துகள் பலவற்றைக் கொண்டுள்ள பொருள்கள் எடுத்துக்காட்டு: வடிகால் தூய்மை செய்யும் எண்ணெய்ப்பூச்சு, இயக்கி (motor) எண்ணெய், உறைதல் தடுப்பி, எரிபொருள், நஞ்சு, பூச்சிக்கொல்லிகள்,களைக்கொல்லிகள், எலிக்கொல்லிகள், ஒளிரும் விளக்குகள், விளக்கின் அடிப்பகுதி, புகை கண்டறியும் கருவி, மருத்துவக் கழிவுகள், தூய்மை செய்யும் சிலவகை வேதிப்பொருள்கள், மின்கலஙகள், காலணி மெருகு, ஒப்பனைப் பொருள் முதலியன.
15. **வீடுவீடாக சேகரித்தல் (Door to Door Collection):-** வீடுகள் கடைகள், வணிக நிறுவனஙகள், அலுவலகஙகள், குடியிருப்பு அல்லாத மற்ற இடஙகள் ஆகியவற்றில் நுழைவு வாயிலில் அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஒரு இடத்தில் திடக்கழிவு சேகரிப்பு செய்வது.
16. **உலர்கழிவு** (**Dry Waste**):-மக்கும் குப்பை, தெருக்களை பெருக்குவதால் உருவாகும் கழிவு மறுசுழற்சி குப்பைகள், மறுசுழற்சி செய்ய இயலாத குப்பைகள், எளிதில் தீப்பிடிக்கும் கழிவுகள், நாப்கின்கள், டயாப்பர்கள், ஆகியவற்றில் சேராத கழிவுகள்.
17. **குப்பைகொட்டும் தளம் (Dump site):-** சுகாதார நிலப்பூர்த்தி கொள்கைகள் இல்லாமல் உள்ளாட்சி அமைப்புகளால் பயன்படுத்தப்படும் நிலம்.
18. **நீடித்த தயாரிப்பாளர் பொறுப்பு (Extended Producer Responsibility):-** பிளாஸ்டிக், தகரம், கண்ணாடி மற்றும் நெளி பெட்டிகள் போன்ற பொருட்களின் இறுதி நிலை வரை சுற்றுசூழலுக்கு தீஙகுவிளைவிக்காத வண்ணம் பாதுகாப்பது தயாரிப்பாளரின் பொறுப்பு.
19. **வசதி (Facility):-** திடக்கழிவு மேலாண்மை செயல்முறைகளான சேகரித்தல், சேமித்தல், மறுசுழற்சி செய்தல், செயலாக்கம் செய்தல், பாதுகாப்பாக அகற்றுதல் எந்த ஒரு நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோ அஙகுதான் கழிவுகள் பாதுகாப்பாக அகற்றுதல் மேற்கொள்ளப்படவேண்டும்.
20. **தண்டம் (Fine):-** குப்பைகள் உற்பத்தி செய்பவர்கள், செயலாக்கம் செய்பவர்கள் ஆகியோர் விதிகள் மற்றும் துணைவிதிகளை மீறும்பட்சத்தில் விதிக்கப்படும் தண்டம்.

21. **கையாளுதல் (Handling):-** திடக்கழிவுகளை பிரித்தல், சேகரித்தல், பொருள் மீட்பு, பாகுபாடு செய்தல், வகைபடுத்துதல், துண்டுகளாக்குதல், நசுக்குதல், ஏற்றுதல், இறக்குதல், போக்குவரத்து செய்தல், செயலாக்கம் செய்தல்.

22. **மந்தப் பொருள் (Inerts)** : திடக்கழிவு அல்லது செயலாக்கத்திற்குப் பின்பு இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளால் தூய்மையின் பொருட்டு பள்ளம் நிரப்புதல் (land filling) க்குத் தகுதியாக இருக்கும் திடக் கழிவிலிருந்து எஞ்சுபவை.

23. **எரித்தல் (Incineration):-** அதிக வெப்பநிலையில் பொருள்களை பொறியியல் செயல்முறையின்படி எரித்தல்.

24. **முறைசாரா கழிவு சேகரிப்பவர் (Informal waste collector):–** மறுசுழற்சி பொருள்களை சேகரித்தல், வகைபடுத்துதல், விற்பனை செய்தல், தனிநபர்கள், சஙகஙகள், அல்லது கழிவுபொருள்கள் பணியில் ஈடுபடும் கொள்முதல் செய்யும் வர்த்தகர்கள்.

25. **மக்கும் குப்பைக்கழிவு நீர்( Leachate ):–** திடக்கழிவுகள் மக்கும் போது உருவாகும் திரவப்பொருள்

26. **உள்ளாட்சி(local body):–** இந்த விதிகளை செயல்படுத்தும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு மாநிலஙகள் மற்றும் யூனியன் பிரதேசஙகளில் நகரசபை, நகர் நிகாம், மாநகரசபை, நகர் பாலிகா, பரிஷத், நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் பேருராட்சி, வரையறுக்கப்பட்ட (Notified) பகுதிகள், வரையறுக்கப்பட்ட தொழிற்துறை குடியிருப்புகள் (Notified Industried Townships) என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அமைப்புகள்.

27. **பொருட்கள் மீட்பு வசதி(Materials recovery facility** ):– உள்ளாட்சி அமைப்புகளாலோ அல்லது அவர்களால் அஙகீகரிக்கப்பட்ட நிறுவனஙகளாலோ திடக்கழிவுகளிருந்து மறுசுழற்சிக்குரிய முறைசாரா கழிவு சேகரிப்பவர்கள் அல்லது உள்ளாட்சி அமைப்பால் அஙகீகரிக்கப்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்டவர்களால் மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட வசதி.

28. **மக்காத உயிரிக் கழிவு (Non-biodegradable waste)**:– வாழும் பிற உயிரினஙகளால் பிரிக்க இயலாத கழிவுகள் என்பது இதன் பொருள்.

29. **செயலாக்கம் செய்பவர்கள் அல்லது இயக்குபவர்கள் (Operator of a facility):-** உள்ளாட்சி அமைப்பால் அஙகீகரிக்கப்பட்ட தனிநபரோ அல்லது நிறுவனமோ திடக்கழிவுகள் கையாளும் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பிலோ அல்லது சொந்தமாக ஏற்படுத்தப்பட்ட அமைப்பிலோ செயலாக்கம் செய்வது.

30. **முதல்நிலைசேகரிப்பு(Primary collection** ) : –நகர திடக்கழிவு (MSW) குப்பைகளை நிலையான இடங்களிலிருந்து அல்லது மற்ற இடங்களிலிருந்து, எடுத்தலும் அகற்றுதலும் ஆகும்.

31. **செயலாக்கம்(**Processing) :– மறுசுழற்சி நோக்கத்திற்காக அல்லது உரம் தயாரிப்பதற்காக அல்லது பள்ளத்தில் குப்பைகொட்டி நிரப்புவதற்காக நகராட்சி திடக்கழிவு (MSW)ஐ இயந்திர தொழிற்கூடம் கொண்டு சென்று அறிவியல் முறைப்படி திருத்திச் செய்யும் அறிவியல் அடிப்படை செயலாக்கம்.

32. **மறுசுழற்சி :** மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி திடக்கழிவு (MSW) குப்பையில் காணப்படுவதாகும். இது உலா கழிவு எனவும் அழைக்கப்படுகின்றது. இதை ஒரு செயல்முறையில் புதிய பொருள்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருள்களைக் மாற்ற முடியும் புதிய அப்பொருள்கள் அசல் பொருள்கள் போல் இருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம்.

33. **அபிவிருத்தி (Redevelopment ):–** பழுதடைந்த குடியிருப்பு அல்லது வணிக கட்டிடஙகளை மறுசீரமைப்பு அதே இடத்தில் மேற்கொள்வது.

34. **கழிவுகளில் இருந்து பெறப்படும் எரிபொருள் (Refused derived fuel)**:- – பிளாஸ்டிக், மரம், காகிதகூழ் அல்லது கரிம கழிவு மற்றும் குளோரின் பொருட்கள் தவிர்த்த திடக்கழிவு பொருள்களினை சிறுதுண்டுகளாக வெட்டப்பட்டு உலரவைக்கப்பட்டு கெட்டியாகப்பட்ட பொருள்.

35. **எஞ்சிய திடக்கழிவு (Residual solid waste)–** திடக்கழிவு பொருள்களிலிருந்து மறுசுழற்சி அல்லது மேலும் வேறு எந்த செயலுக்கும் ஏற்றது அல்ல என ஒதுக்கப்பட்டு எஞ்சிய பொருள்கள்.

36. **சுகாதாரக்கழிவு(sanitary waste ):–** பயன்படுத்தப்பட்ட டயாப்பர்கள், நாப்கின்கள், ஆணுறைகள் போன்ற வகையலான கழிவுகள்.

37. **அட்டவணை(Schedule)** என்பது இந்தத் துணைவிதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை

38. **இரண்டாம் நிலை சேமிப்பு(Secondary storage):-** திடக்கழிவுகளை செயலாக்கம் செய்யும் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு முன் முதல் நிலை சேகரிப்பு செய்த கழிவுகள் போட தற்காலிகமாக அமைக்கப்படும் கழிவு சேமிப்பு இருப்பு கிடஙகு.

39. **பிரித்தல்(segregation):–** நகராட்சி திடக்கழிவு (MSW) உயிரிமக்கும் குப்பை மக்காத குப்பை, அபாயகரமானது,உயிரி மருத்துவம், கட்டுமானமும் இடித்தலும், பெருமளவு

தோட்டமும் தோட்டக்கலையும், காகிதம்,கண்ணாடி, பிற மந்தக் கழிவு என்று குறிப்பிட்ட வகைகளாகப் பிரித்தல் ஆகும்.

40. **சேவை வழங்குனர்( service provider ):–** நீர், கழிவு நீர், மின்சாரம், தொலைபேசி, சாலைகள், வடிகால் போன்ற பொதுபயன்பாடு சேவைகளை வழங்குபவர்கள்.

41. **திடக்கழிவு(solid waste ):–** திட மற்றும் திரவ வீட்டு கழிவுகள், சுகாதாரக்கழிவு, வணிக கழிவுகள், அலுவலக கழிவுகள், உணவக கழிவுகள், சந்தை கழிவுகள், குடியிருப்பு அல்லாத தெரு பெருக்குவதால் உருவாகும் கழிவுகள், கழிவுநீர் கால்வாய்களிலிருந்து எடுக்கப்பட்ட அல்லது சேகரிப்பட்ட கழிவு மண்கள், தோட்டக்கலை கழிவுகள், விவசாய கழிவுகள், பால் கழிவுகள்,தொழிற்சாலை மருத்துவ கழிவுகள், பேட்டரி கழிவு, எலக்ரானிக் கழிவுகள் மற்றும் விதி 2ல் நகர் மன்றத்தால் வரையருக்கப்படு கழிவுகள்.

42. **வகை பிரித்தல் (sorting )–** கலவையான கழிவுகளிலிருந்து பொருத்தமான கழிவுகளை பல்வேறு கூறுகளாக காகிதம், பிளாஸ்டிக், உலோகஙகள், கண்ணாடி என மறுசுழற்சி பொருள்களாக பிரித்தல்.

43. **நிலைத்த தன்மை அல்லது நிலையான தன்மை(stabilising )–** கழிவுநீர் வடியாமலும், துர்நாற்றம் வீசாமலும் மக்கும் குப்பைகள் உயிரியல் சிதைவு முறையில் கட்டுப்பாட்டிற்கும் பொருத்தமான நிலை அடைதல்.

44. **தெருவிற்பனையாளர் (அ) தெரு ஓர சாலை வியாபாரிகள் (Street Vendor):-** ஒரு தெரு, சந்து, பக்க நடைபாதை, நடைபாதை, பொது பூஙகா அருகில் அல்லது வேறு எந்த பொது இடத்திலோ அல்லது தனியார் பகுதியில் ஒரு தற்காலிகமாக கட்டியெழுப்பட்ட அமைப்பில் இருந்தோ, அல்லது ஒரு இடத்தில் இருந்து மற்ற இடத்திற்கு நகர்ந்து சென்றோ, சுற்றிதிரிந்தோ உணவுபொருள்கள், காய்கறிகள், பழஙகள், அன்றாட பயன்பாட்டு பொருளையோ விற்பவர்கள்.

45. **இயக்ககட்டணம் (Tipping Fee):-** கட்டணம் அல்லது ஆதரவு செயலாக்கம் அல்லது எஞ்சிய திடக்கழிவு அகற்றலுக்காக உள்ளூர் அதிகாரிகள் அல்லது மாநில அரசால் அஙகிகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு மாநில நிறுவனத்தில் நிர்ணயக்கப்படுவது.

46. **பரிமாற்ற நிலையம் (Transfer station):-** குப்பைகளை செயலாக்கம் செய்யும் பகுதிகளுக்கு கொண்டு செல்ல சேகரிப்பு பகுதிகளிருந்து மூடப்பட்டிருக்கும் வாகனஙகள் அல்லது கொள்கலன்களில் கொண்டு செல்லும் வகையில் அமைப்புகள் மற்றும் வசதிகள் செய்யப்பட்டிருக்கும் ஒரு இடம்.

47. **போக்குவரத்து(Transportation)** ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் குப்பையைக் கொண்டு செல்வதாகும்

48. **செயல்முறை (Treatment):-** திடக்கழிவுகளை அதன் அளவு மற்றும் தீஙகு ஏற்படுத்தும் சக்தியின்றி குறைக்க இயற்பியல், வேதியியல், அல்லது உயிரியல் பண்புகள் மூலம் மாற்றியமைக்கும் தொழிற்நுட்பம் அல்லது செயல்முறை.
49. **பயனர் கட்டணம் (user fee):-** என்பதன் பொருள் நகராட்சி திடக்கழிவை (MSW) கழிவுகளை உருவாக்கும் பலவகையினரிடமிருந்து பெறுவதற்காக, கொண்டு செல்வதற்காக, அகற்றுவதற்காக தென்காசி நகராட்சியால் அவ்வப்போது அறிவிக்கப்பட்ட கட்டணம் ஆகும்
50. **மண்புழு உரமாக்கல் (Vermi composting):-** மண்புழுக்களை பணன்படுத்தி மக்கும் கழவுகளை மாற்றும் செயல்முறை.
51. **கழிவு உருவாக்குபவர் (Waste Generator):-** ஒரு நபர் அல்லது குழு குடியிருப்புகள் அல்லது குடியிருப்பு அல்லாத இடஙகளில், வணிகநிறுவனஙகள், இந்திய ரயில்வே பகுதிகள், மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட திடக்கழவு உருவாக்குபவர்களை குறிக்கும்.
52. **கழிவுகள் நிர்வகித்தல் வரிசை (Waste Hierachy):-** திடக்கழிவுகள் உருவாவதை குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி, மீட்பு மற்றும் அகற்றல் என்ற வரிசையில் முக்கியத்துவம் கொடுத்து நிர்வகிக்கப்படுத்தல்.
53. **கழிவு எடுப்பவர்கள்(Waste Picker):-** ஒருநபரோ அல்லது குழுவாகவோ தெருக்களில் உள்ள குப்பைகளில் இருந்தோ, குப்பைதொட்டிகளில் இருந்தோ, கழிவுகள் சேகரிப்பு இடத்தில் இருந்தோ, உரக்கிடஙகில் இருந்தோ, செயலாக்கப்பகுதியில் இருந்தோ, மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை எடுத்து, மறுசுழற்சி செய்பவர்களிடம் விற்பனை செய்து பெற்ற வருமானத்தில் வாழ்கையை நடத்துபவர்கள்.
54. **முகமை(Agency)** : தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயனர் கட்டணம் வசூல் செய்தல் போன்றவற்றிற்காக,முகமைக்கும் தென்காசி நகராட்சிக்கும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமைகளை ஆற்றும் பொருட்டு தென்காசி நகராட்சியால் அமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழஙகப்பட்ட தனியார் நிறுவனம்
55. **தோட்டம் மற்றும் தோட்டக்கலை பெருமளவுக் கழிவு( Bulk garden and Horticultural waste):** பூஙகாக்கள், தோட்டஙகள், போக்குவரத்து வட்டஙகள் போன்றவற்றிலிருந்து உருவாகும் பெருமளவுக் கழிவுகள் ஆகும். அன்றாட கழிவுகள் எடுத்தலில் சேர்க்க இயலாத மக்கும் கழிவுகளான புற்களை வெட்டுதல், வருடாந்திர களைகள், கிளைகளைக் கழித்தல்,சருகுகள், மரச்சிராய், வைக்கோல், உலர்ந்த இலைகள்,

ஒழுங்குபடுத்துவதால் ஏற்படும் மரக்கழிவு போன்றவற்றால் உருவாகும் கரிமம் (carbon) அதிகமாக உள்ள பழுப்பு மரப்பொருள்கள் இதில் அடங்கும்

56. **தூய்மைப் பகுதி (Clean Area):** எந்த வளாகத்தின் முன்னும் அல்லது சுற்றியுள்ள பகுதிகள் அல்லது வடிகால் /கால்பாதை, நடைபாதை ஓரத்தில் வரிசையாகப் பதிக்கப்பட்ட கல் (kerb) ஆகியன உள்ளிட்ட பகுதிவரை ஒட்டியுள்ளதும் ஆன பகுதிகள் தூய்மைப் பகுதி ஆகும்.

57. **சமுதாயக் குப்பைத் தொட்டி(Community waste storage bin )** : நகராட்சியால் நிறுவப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வரும் குப்பைத் தொட்டி அல்லது உரிமையாளர்கள் மற்றும்/ அல்லது குடியிருப்போர் கூட்டாக ஒன்று அல்லது பல வளாகங்கள் சேர்ந்து குப்பைகளை தரம் பிரிக்கவும் வசதி கொண்ட வகையில் எதாவது ஒரு வளாகத்தின் சாலையோரத்தில் அல்லது அவர்களுக்குரிய பொது இடத்தில் அமைக்கப்பட்ட குப்பைத் தொட்டி ஆகும்.

58. **கட்டுமானம் மற்றும் கட்டிட உடைபாடு பொருட்கள் (C&D waste)** : பழுது பார்த்தல், கட்டுமானம்,மீளக்கட்டுதல் செயல்பாடுகளால் உருவாகும் கழிவுகளோடு கட்டுமானத்திலும் கட்டிட இடிபாடுகளில் ஏற்படும் இடர் தரத் தக்கதல்லாத இயல்புள்ள கழிவுகளாகும்.

59. **பழக்கப்படுதல்/ எச்சரிக்கைக் காலம் (Familiarization/warning period):–** விதிகளை மீறுவதற்குச் செலுத்த வேண்டிய தண்டத் தொகையில் தளர்வுள்ள அட்டவணை –1ல் வழஙகப்பட்டுள்ள குறிப்பிட்ட காலம்.

60. **அபாயகரமான கழிவு (Hazardous waste):–** கழிவுகள், இயற்பியல், வேதியல், எதிர்ச்செயல்பாடு, நச்சு, காரணத்தால் ஆபத்துத் தருவது அல்லது உடல்நலத்திற்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு ஆபத்துத் தரத்தக்கதாக இருக்கக்கூடியது. தனியாக அல்லது வேறொரு கழிவுகளோடு, அல்லது பொருள்களோடு சேரும்போது ஆபத்து ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. குறிப்பாக அட்டவணை–III ல் குறிப்பிட்டுள்ளபடி, இந்தத்துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதும் பிற அபாயகரமான கழிவும் அபாயகரமான கழிவுகள் என வரையறுக்கப்பட்டுள்ளன. (மேலாண்மை மற்றும் கையாளுதல்) சட்டஙகள் 1989, (இன்று வரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

61. **வீட்டு ஜலதாரை( House-gully) :** –சாக்கடை நீர் செல்வதற்காக ஒதுக்கப்பட்ட வழி அல்லது அதற்காக விடப்பட்ட சிறு நிலம் அல்லது சாக்கடை செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவது அல்லது மலம், மூத்திரம் சாக்கடைக் குழிக்கு

எளிமையாக செல்லக்கூடியது அல்லது நிரப்புவதற்கான பிற கொள்கலன் அல்லது பிற மாசுப் பொருள்கள் அதை அகற்ற ஆட்களை அமர்த்துவது அல்லது அங்கிருந்து இவ்வகைப் பொருள்களை அப்புறப்படுத்துவது.

62. **சிதறி கிடக்கும் குப்பை(Litter) :–** தேவை இல்லை என எறிவதற்கும் ஒருங்கு சேர்ப்பதற்கும் இந்தத் துணைவிதிகளால் தடை உள்ள அனைத்துப் பொருள்கள் அல்லது அசுத்தம் ஏற்படுத்தும் அல்லது ஆபத்து விளைவிக்கும் அல்லது பொதுநலக் காப்பிற்கும், நலத்திற்கும் தொல்லையாக விளஙகும் பொருள்கள்.

63. **குப்பை கொட்டுதல்(Littering) :–** குப்பை கொட்டுதல் என்பது குப்பை அது விழுந்து, இறஙகி, காற்றில் பறந்து, அடித்துச்சென்று, கசிந்து அல்லது விலகி ஓடும் அல்லது அது விழுந்து, இறஙகி, காற்றில் அடித்துச்சென்று, கசிந்து அல்லது விலகி ஓடக்கூடிய வாய்ப்புள்ளதாக இருக்கும் அல்லது, இல்லையெனில் விலகி ஓடி பொது இடத்திற்குள் அல்லது பொது இடத்தின்மேல் விழுந்து அல்லது பொது இடத்திற்குள் அல்லது பொது இடத்தின் மேல் விழக் காரணமாக இருந்து, அல்லது அனுமதிப்பதாக இல்லாத இடத்தில் கொட்டுவதாகும்.

64. **அணிமை இடம் (Neighbourhood) :–** இயற்கை அமைப்பு மனைத்திட்டம், அதன் நிலை, அஙகு இருப்போர் என்பவற்றுடன் தெளிவாக வரையறுக்கப்பட்ட வட்டாரம் என்பது பொருள்.

65. **புதிய கட்டுமானம் (New construction):** நகராட்சி எல்லைக்குள் பொதுமக்களால் கட்டப்படும்அனைத்துக் கட்டடஙகள் என்பது பொருள்.

66. **தொல்லை (Nuisance) :–** கெடுதி, அபாயம், எரிச்சலூட்டுதல் ஏற்படுத்த காரணமாக உள்ள செயல்பாடு, விடுபாடு,இடம் அல்லது பொருள் ஆகியனவும் அல்லது பார்வை, முகர்தல், கேட்டல் ஆகியவற்றிற்கு அருவெறுப்பாக உள்ளனவும் அல்லது உயிருக்கு ஆபத்தாக உள்ளதும் அல்லது உடல் நலத்திற்கு அல்லது சொத்துக்குக்கேடாக உள்ளதும் தொல்லைத் தருவதாகும்.

67. **தொல்லை கண்டறிபவர் Nuisance Detectors (ND) : –**பொதுத் தொல்லை மற்றும் இதர நடவடிக்கைகளைக் கண்டறிவதற்காக ஆணையாளரால் நியமிக்கப்பட்ட / தெரிவுசெய்யப்பட்ட ஊழியர் என்பது பொருள்.

68. **குடியிருப்போர் / தஙகியிருப்போர் (Occupier / occupant) : –**நிலம் அல்லது கட்டடம் அல்லது அவற்றின் பகுதியை வாடகைக்குக் கொண்டு தற்காலிகமாக அல்லது பிறவகையில் தன் பயன்பாட்டில் வைத்திருப்போர்.

69. **உரிமையாளர் (Owner) :–** கட்டடம் அல்லது நிலம் அல்லது அவற்றின் பகுதிக்குச் சொந்தம் கொண்டாடும் உரிமையாளர்.

70. **பொது இடம் (Public place): –** சாலை, முக்கியமான உயர்ந்த வளைவுச் சாலை, நதி அல்லது பள்ளத்தாக்கு முதலியவற்றை கடக்கும் இரயில் (அ) சாலை வாராவதி சந்து, நடைபாதை அல்லது வழிப்பாதை, நெடுஞ்சாலை, தரைப்பாலம், நடைவழி, குறுகிய சந்து, குறுகிய வழி, சதுர குறுகிய வழி, பொது (வழி) சாலை அல்லது பொதுவில்லா சாலை, பூஙகாக்கள், தோட்டஙகள், பொழுதுபோக்கு மைதானஙகள், விளையாட்டு மைதானஙகள், கடற்கரைகள், நீர்நிலைகள், நீர் செல்லும் வழிகள் பொது பிளாஸாக்கள், உலாவும் இடம், அரசு மற்றும் நகராட்சி கட்டடஙகள், பொது மருத்துவமனைக, இறைச்சிக் கொட்டில்கள், நீதிமன்றஙகள் முதலியன.

71. **மறுசுழற்சி செய்யத்தக்க கழிவுகள் (Recyclable Waste):–** நகராட்சி திடக்கழிவு (MSW) குப்பையில் பொதுவாகக் காணப்படும் குப்பையாகும். இது உலா கழிவு என்றும் அழைக்கப்படும் இது பலவகைக் கண்ணாடிகள், காகிதம், உலோகம், நெகிழி, ஜவுளி, மின்னணுப் பொருள்கள், போன்றவற்றை உள்ளடக்கியது.

72. **கொள்கலன் (Receptacle):– நகராட்சி திடக்கழிவு (**MSW) வின் எவ்வகைக் குப்பையையும் சேர்த்து வைக்க பயன்படுத்தும் தொட்டி, பை போன்ற கொள்கலன்கள்.

73. **காளாஞ்சி(Spittoon):–** எச்சில் துப்புவதற்குப் பயன்படுத்தும் வைத்துூற்றி (Funnel) போன்ற வாய் போன்ற அமைப்புடைய உலோகம் அல்லது மண் ஏனம்.

74. **தேவையற்ற விலக்கிய பொருள்(**Refuse)**:–** இருக்கும் வடிவத்தில் உருவாக்குவோரால் நுகர, பயன்படுத்த, செயல்முறைக்கு உட்படுத்த இயலாதது தேவையற்றது என்று விலக்கிய பொருள் ஆகும். இது பல்வேறு, செயல்பாடுகளால், செய்முறைகளால் உயிரிமைக்கும், உயிர் மக்காத வகையில் மறுசுழற்சி இயல்பு கொண்ட, திடவடிவில் அல்லது அரை–திடவடிவில் ஏற்படுபவை ஆகும்.

75. **மூலர் (Source):–** கழிவு உருவாகும் வளாகம் அல்லது உரிமையாளர் பயன்படுத்தும் சமூக ஒருஙகு சேர்ப்பு மையம் /தஙகி இருப்போரின் நகராட்சி திடக்கழிவுகளைப் பிரித்து ஒருஙகு சேர்ப்பதற்காக ஒன்று அல்லது அதிகமான வளாகஙகள்.

76. **நிலைப்படுத்தப்பட்ட உயிரி மக்கும் கழிவு (Stabilised biodegradable waste):-** என்பது உயிரியல் அமைப்பில் நிலைப்படுத்தப்பட்ட(நோய்க்கிருமிகள் இல்லாத) கழிவு ஆகும். உயிரி மக்கும் கழிவின் இயந்திர உயிரியல் சிகிச்சை விளைவாக உருவாவது.

இது இக்கழிவு நிலைப்படுத்தப்பட்ட பின்பு எவ்வகைக் கட்டுப்பாடும் இல்லாமல் பயன்படுத்த தகுதியாகும்.

77. **சுகாதாரம் (**Sanitation):- என்பது உடல் நலம் பேணுதலும் நோய்களைத் தடுத்தலும் உடல்நலமில்லை நிலைத் தொடர்பான சூழல் காரணிகளான பிற விளைவுகளைத் தடுத்தலும் ஆகும்.

78. **துப்புரவுப் பணியாளர் (Sanitary worker):** நகராட்சி திடக்கழிவு (MSW)வைப் பெறுவதற்காக அல்லது அப்புறப்படுத்துவதற்காக அல்லது பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியிலுள்ள சாக்கடையைத் தூய்மைப்படுத்துவதற்காக முகமையால் பணியமர்த்தப்பட்ட பணியாளர்.

79. **சுகாதார பள்ளம் நிரப்பு வசதி (Sanitary land filling Facility)** என்பதன் பொருள் திடக்கழிவுகள் எஞ்சும் பகுதி நிலத்தடி நீர் / மேற்பரப்பு நீர் மாசுபடுவதற்கு மற்றும் காற்று, தூசு, காற்றில் பறந்து வரும் குப்பை, துர் நாற்றம், தீயினால் ஏற்படும் இடையூறு பறவை, பூச்சி அல்லது எலி அச்சுறுத்தல், பசுமைச்சூழல் வாயு (green house gas) வெளிப்பாடு, சரிவு உறுதியற்ற தன்மை, அரிப்பு ஆகியவற்றிற்கு எதிராகப் பாதுகாப்பான வகையில் வடிவமைத்து சேர்க்கும் குப்பை கொட்டும் இடம் ஆகும்.

80. **வெற்றிடமனை(Vacant Plot):** பயன்படுத்தாமலிருக்கும் தனியார் குழுவுக்கு / தனியாளுக்குச் சொந்தமான நிலம் அல்லது திறந்தவெளி

4.0 கழிவு உருவாக்குபவர்களின் கடமைகள்

**(1)** கழிவுகள் உருவாக்கும் ஒவ்வொருவரும்

(a) உருவாகும் குப்பைகளை மக்கும் தன்மை உள்ளவை, மக்காத தன்மை உள்ளவை, அபாகயகரமான வீட்டுகழிவுகள் எனத்தனிதனியே பிரித்து மக்கும் தன்மை உள்ள கழிவுகளினை பச்சைநிறக்கூடைகளிலும் மக்காத தன்மை உள்ள குப்பைகளினை வெள்ளைநிற கூடையிலும் அபாயகரமான வீட்டுக்கழிவுகளை கருப்பு நிறக்கூடையிலும் என 3 வண்ண குப்பைக்கூடைகளில் சேகரித்து நகராட்சியால் வழஙகப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் வழஙகப்படவேண்டும். இது குப்பைகளினை உருவாக்குபவர்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். கூடைகள் சொந்த செலவில் வாஙகி உபயோகப்படுத்த வேண்டும்.

(b) சுகாதாரகழிவுகளான டயப்பர், நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழஙகப்படுகின்ற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் சுற்றியோ உலர் கழிவுகள் அல்லது மக்காத கழிவுகள் வைக்கப்படும் கூடையில் பிரித்து வைத்து வழஙகப்படவேண்டும்.

(c) கட்டுமான மற்றும் இடிப்புக்கழிவுகள் அவர்களது வளாகத்திற்குள் மட்டுமே சேகரித்து வைக்கப்படவேண்டியதுடன் கட்டுமான மற்றும் இடிப்புக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 இன் படி அகற்றப்படிவேண்டும்.

(d) தோட்டக்கலை கழிவுகள், பூங்காக்கழிவுகள் ஆகியவை அவர்களது வாளாகத்திற்குள் மட்டுமே சேகரித்து வைக்கப்படவேண்டியதுடன் நகராட்சியால் வழஙகப்படும் அறிவுரைப்படி அகற்றப்படவேண்டும்.

(2) குப்பைகள் உருவாக்குபவர்கள் யாரும் தஙகளால் உருவாக்கப்படுகின்ற குப்பைகளினை தெருக்களிலோ, பெது இடஙகளிலோ நீர் நிலைகளிலோ எரிவதோ. எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது.

(3) குப்பைகள் உருவாக்கும் அனைவரும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட துணைவிதிகளின் படி திடக்கழிவு மேலாண்மைக்குரிய பயனர் கட்டணம் செலுத்தவேண்டும்.(அட்டவணை–I)

(4) நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூடும் நிகழ்ச்சி மேற்கொள்ள 3 வேலை நாட்களுக்கு முன்னதாக நிகழ்ச்சி அமைப்பாளர் நகராட்சியில் உரிய அனுமதி பெறவேண்டும். மேலும் நிகழ்ச்சியின் போது உருவாகும் குப்பைகளினை தனித்தனியே பிரித்தே சேகரித்து வைப்பதுடன் சம்பந்தப்பட்டவர்கள் தஙகளது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் அல்லது உரிய பயன்படுத்துவோர் கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவற்றை அப்புறப்படுத்தும்.

(5) சாலைஓர வியாபாரிகள் தஙகளது வியாபாரத்தின் மூலம் உருவாகும் உணவுக்கழிவுகள், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் தட்டுகள், டம்ளர்கள் தேஙகாள் ஓடுகள், எஞ்சியிருக்கும் உணவு அழுகிய காய்கறிகள், பழஙகள் போன்ற குப்பைகளினை தெருக்களிலோ சாலை ஓரஙகளிலோ அல்லது பொது இடஙகளிலோ போடக்கூடாது. அவற்றை பிரித்து அதற்கேற்ற குப்பைதொட்டியில் சேகரித்து நகராட்சியால் வழஙகப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் அல்லது கழிபுப்பொருள்கள் சேகரிப்பு நிலையத்தில் வழஙகப்படவேண்டும்.

(6) குடியிருப்போர் நல அமைப்புகள், சந்தை நலச்சஙகம் ஆகியவற்றைச்சார்ந்தவர்கள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்கும் குப்பைகளினை தனியே பிரித்து தஙகள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு உற்பத்தி செய்யவோ வேண்டும் மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அஙகீகரிப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(7) 5000 ச.மீ மேல்பரப்பளவு கொண்ட குடியிருப்புவளாகங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்காத குப்பைகளினை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு செய்யவோ வேண்டும் மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(8) தினமும் 100 கிலோவிற்கு மேல் கழிவுகள் உற்பத்தி செய்யும் உணவு விடுதிகள் மற்றும் பிற நிறுவனங்கள், அலுவலகங்கள், விடுதிகள் இந்த விதிகள் அமலுக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மக்காத குப்பைகளினை தனியே பிரித்து தங்கள் வளாகத்திற்குள்ளேயே நகராட்சியின் வழிகாட்டுதலின் படி உரமாகவோ அல்லது உயிரிவாயு செய்யவோ வேண்டும் மக்காத குப்பைகளினை தனியாக நகராட்சியால் அங்கீகரிப்பட்ட குப்பை பொறுக்குபவர்களிடமோ அல்லது மறுசுழற்சி செய்பபவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும்.

(9) அனைத்துவகையிலான கழிவுபொருள்களையும் பேப்பர், தண்ணீர் பாட்டில்கள், காகித தண்ணீர் பாட்டில்கள், மது பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள், அழுகிய காய்கறிகள், பழங்கள், டம்ளர்கள் போன்றவற்றினை தெருக்களிலோ, பொது இடங்களிலோ நீர் நிலைகளிலோ எரிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது. தனித்தனியே விதிகளில் குறிப்பிட்டுள்ள வண்ண குப்பைக்கூடைகளில் சேகரித்து நகராட்சியால் வழங்கப்படும் அறிவுரைகளின் படி துப்புரவுப்பணியாளர்களிடம் அல்லது கழிவுகள் சேகரிக்க வருபவர்களிடம் வழங்கப்படவேண்டும்.

5.0 பட்டுக்கோட்டை நகராட்சியின் பொறுப்புகள்:–

(a) அனைத்து குடியிருப்பு பகுதிகள், வணிக நிறுவனங்கள், சேரிகள், முறைசாரா குடியேற்றஙகள், சேமிப்பு கிடஙகுகள், வீட்டு வளாகஙகள், பெரிய வணிக வளாகஙகள், குடியிருப்பு அல்லாத பகுதிகள் ஆகியவற்றில் வீடுவீடாக பெற ஏற்பாடு செய்தல். அடுக்குமாடி குடியிருப்புகள், பெரிய வணிக வளாகங்கள், வீட்டு வளாகங்கள் ஆகிய இடஙகளில் நுழைவு வாயிலில் இருந்தோ அல்லது ஏற்கனவே முன் அறிவிப்பு செய்யபட்ட இடத்தில் இருந்தோ பெற்று கொள்ளப்படும்.

(b) கழிவு பொருள் சேகரிப்பவர்கள், அல்லது முறைசாரா கழிவு பொருள் சேகரிப்பவர்கள், நிறுவனங்கள் ஆகியோரினை அங்கீகரிக்க மற்றும் ஊக்குவிக்க ஒருஙகிணைப்பு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளில் வீடுவீடாக குப்பை சேகரிப்பில் கழிவு சேகரிப்பவர்களை ஈடுபடுத்துதல்.

(c) சுயஉதவி குழுக்களினை உருவாக்கி அடையாள அட்டை வழஙகி திடக்கழிவு மேலாண்மைப்பணிகளில் வீடுவீடாக குப்பை சேகரிப்பில் ஒருஙகைணைப்பை ஊக்குவித்தல்.

(d) நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலமாகவோ அவ்வப்போது அட்டவணையில் தெரிவிக்கப்படுள்ள பயனர் கட்டணம் கழிவு உற்பத்தியாளர்களிடமிருந்து பெறுதல். (அட்டவணை–I)

(e) பொருள் மீட்பு வசதி மையங்கள் அல்லது இரண்டாம் நிலை சேகரிப்பு மையங்கள் போதுமான இடைவெளி அமைப்புகளுடன் முறைசாரா அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை பொறுக்குபவர்கள் அல்லது குப்பை சேகரிப்பவர்கள் மறுசுழற்சி பொருள்களான பிளாஸ்டிக், உலோகம், கண்ணாடி, துணிகள் ஆகியவற்றை பிரித்தெடுக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும். மேலும் மக்கும் கழிவுகள் சேகரிக்க பச்சை றித்திலும் மறுசுழற்சி கழிவுகளை வெள்ளை நிறத்திலும் மற்ற கழிவுகளை கருப்பு நிறத்திலும் அமைக்கவேண்டும்.

(f) இருபது சதுர கிலோ மீட்டருக்கு ஒரு கழிவு சேகரிப்பு மையங்கள் அமைக்கப்படவேண்டும். சுகாதாரமான முறையில் அபாயகரமான வீட்டு கழிவுகள் அகற்ற குப்பைகளை உற்பத்தி செய்பவர்களால் உள்ளாட்சியில் தெரிவிக்கப்பட்ட நேரங்களில் வழஙகும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(g) கழிவுகள் சேகரிப்பவர்கள், கழிவுகளை பொறுக்குபவர்கள் கழிவுகளை மறுசுழற்சி செய்பவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பயிற்சி அளித்தல்.

(h) காய்கறி, பழம், பூ, இறைச்சி மற்றும் மீன் சந்தை நாள்தோறும் கழிவுகளை சேகரித்து பொருத்தமன இடஙகளில் உயிர் மீத்தேனேசன் அல்லது மண்புழு உரம் தயாரிக்க அமைப்பு உருவாக்குதல்.

(i) தெருக்களினை பெருக்குதல் பணிகளை மக்கள் தொகை அடத்தியை பொறுத்தும் வணிக செயல்பாடு மற்றும் உள்ளூர் நிலைமையை பொறுத்து தினசரி அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்லது வாரம் இருமுறை மேற்கொள்ளுதல்.

(j) தோட்டகழிவுகள், பூஙகாக்கள் ஆகியவற்றில் சேரும் கழவுகளை தனியாக சேகரித்து முடிந்த வரை பூஙகாக்கள் மற்றும் தோட்டஙகளிலேயே செயல் முறை மேற்கொள்ளுதல்.

(k) மக்கக்கூடிய கழிவுகளை உயர் மீத்தேனாக்கம் செய்யவோ அல்லது செயலாக்கம் செய்யவோ வாகனம் மூலம் கொண்டு செல்லப்படும் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உயிர் மீத்தேனேசன் அல்லது உரம் தயாரிக்கும் பணிகள் ஊக்குவிக்கப்படும்.

(l) மக்காத கழிவுகள் பொருள் மீட்பு வசதி உள்ள இடத்திற்கோ அல்லது இரண்டாம் சேமிப்பு வசதி உள்ள இடத்திற்கோ அல்லது செயலாக்கவசதி உள்ள இடத்திற்கோ வாகனம் மூலம் போக்குவரத்து மேற்கொள்ளப்படும்.

(m) கட்டுமான மற்றும் இடிப்பு கழிவு மேலாண்மை விதிகள் 2016 ன் படி கட்டுமான இடிப்பு கழிவுகள் மற்ற கழிவுகளுடன் கலக்காமல் தனியாக வாகனம் மூலம் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

(n) கழிவு மேலாண்மை வீட்டு உரமாக்கலில் துர்நாற்றம் மற்றும் சுற்றியுள்ள பகுதி தூய்மையாக பராமரிக்கும் சாண எரிவாயு தயாரித்தல் மற்றும் பரவலாக்கப்பட்ட செயலாக்க மையங்கள் அந்தந்த சமுதாய பகுதிகளிலே ஏற்படுத்த ஊக்குவித்தலும் சமுதாயக்கட்டமைப்பில் பஙகெடுக்கச்செய்வதும்.

(o) இரண்டு ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்பால் பராமரிக்கப்படும் பூஙகாக்கள், தோட்டஙகள் மற்ற இடஙகள் ஆகியவற்றில் வேதியியல் உரஙகள் பயன்படுத்தியதை குறைத்து இயற்கை உரம் பயன்படுத்த செய்தல்.

(p) மாநில அரசின் நகர அபிவிருத்தி அமைச்சகம் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் பரிந்துரைக்கப்படும் தரத்தில் உள்ளாட்சி அமைப்பாலோ அல்லது தனியார் பஙகளிப்புடன் தகுதியான பொருத்தமான தொழிநுட்பத்தை பயன்படுத்தி கட்டுமானம் இயக்கம் மற்றும் திடக்கழிவு செயலாக்க வசதிகள் ஏற்படுத்துதல் சுற்றுப்புற சூழல் பாதிப்புகளை குறைக்கவும் போக்குவரத்து செலவினை குறைக்கவும் பரவலாக்கப்பட்ட செயலாக்கம் மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும்.

   (a) உயிர் மீத்தேனேஷன் நுண்ணுயிர் உரமாக்கலோடு மண்புழு உரத்தயாரிப்பு, காற்றுபுகா செரிமானம் அல்லது மக்கும் கழிவுகளை உயர் நிலைபாட்டிற்காக மற்ற செயலாக்கமும்,

   (b) திடக்கழிவு மின்உற்பத்தி நிலையஙகள் அல்லது சிமெண்ட் உலைகளுடன் மூல எரிபொருடன் கழிவுபொருட்கள் கலந்து கொடுத்தல்.

(q) எஞ்சிய கழிவுகள் அகற்ற அட்டவணை 1ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி சுகாதார நிலப்பராமரிப்பு உள்ளாட்சி அமைப்பாலோ அல்லது வேறு நிறுவனம் மூலமாகவோ கட்டுமானம் இயக்கம் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளலாம்.

(r) ஆண்டு வரவு செலவு திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கான மூலதன நிதி சேவைகள் மற்றும் பராமரிப்பு செய்ய தேவையான நிதி ஒக்கீடு செய்யப்படவேண்டும்.

(s) ஆணையாளர் அல்லது இயக்குனர் நகராட்சி நிர்வாகம் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் 30ம் தேதிக்கு முன் படிவம் IV இல் வருடாந்திர அறிக்கை சமர்பித்தல்.

(t) உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட வருடாந்திர அறிக்கை பின்னர் நகராட்சி நிர்வாத்துறை செயலாளர் பொறுப்பு அதிகாரியாலோ அல்லது ஆணையாளர், நகராட்சி

நிர்வாகம் அவர்கள் மூலம் இந்தந்த மாநில மாசுகட்டுப்பட்டு வாரியம் அல்லது மாசுகட்டுப்பட்டு குழுவிற்கு ஒவ்வொரு ஆண்டும் மே 31 ற்குள் அனுப்பப்பட வேண்டும்.

(u) துப்புரவு பணியாளர்கள், ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவுபணி மேற்பார்வையாளர்கள் அனைவருக்கும் குப்பைகளினை பிரித்து வாஙக முதனிலை சேகரிப்பு மற்றும் இரண்டாம் நிலை போக்குவரத்தின் போது கலப்பற்ற கழிவு செய்வதற்கு பயிற்சி வழஙகப்படவேண்டும்.

(v) அனைத்து தொழிலாளர்களுக்கும் சீருடை, ஒளிரும் சட்டை, கையுறைகள் ரெயின் கோட், காலுறை மற்றும் முகமுடி உட்பட தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணஙகள் வழஙகப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

(w) சந்தை வளாகம் , வீட்டு வளாகஙகள், வணிக வாளாகஙகள் கட்டுவதற்கான திட்டம் ஒப்புதல் அளிக்கும் முன் சேகரிப்பு, பாகுபாடு மற்றும் ஒதுக்கப்பட்ட கழிவுகளை சேமிப்பு மையஙகளை அமைக்க விதிகள் சேர்க்கப்படுகிறது என்று உறுதி செய்தல்.

(x) தகவல், கல்வி, தொடர்பால் மினசாரத்தின் மூலம் பொதுமக்களுக்கும் கழிவுகளை உற்பத்தி செய்பவர்களுக்கு கீழ்கண்ட விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

i) குப்பைகளை வெளியே போடக்ககூடாது.

ii) கழிவுகள் உருவாகுவதை குறைத்தல்.

iii) சாத்தியமான அளவிற்கு கழிவுகளை மீண்டும் பயன்படுத்துதல்.

iv) மக்ககூடிய , மக்க இயலாத (மறுசுழற்சி மற்றும் எளிதில் தீப்பிடிக்ககூடியவை) குப்பைகளை பிரித்து வைத்தல்.

v) வீட்டு வளாகஙகளுக்குள் மக்கும் குப்பைகளை உரமாக்கல், மண்புழு உரத்தயாரிப்பு சாண எரிவாயு உற்பத்தி போன்றவற்றை நடைமுறைபடுத்துதல்.

vi) சுகாதாரகழிவுகளான டயப்பர், நாப்கின்கள் ஆகியவற்றினை உற்பத்தியாளர்களால் அதனுடன் வழஙகப்படுகின்ற உறையினுள்ளோ அல்லது பொருத்தமான பொருளால் சுற்றியோ உலர் கழிவுகள் அல்லது மக்காத கழிவுகள் வைக்கப்படும் கூடையில் பிரித்து வைத்து வழஙகப்படுதல்

vii) குப்பைகள் உருவாகும் இடத்திலேயே பிரித்து சேகரிக்கப்பட்ட கழிவுகளை தனித்தனி குப்பை தொட்டியில் சேகரித்து வைத்தல்.

viii) பிரித்து சேகரிக்கப்பட்ட கழிவுகளை கழிவுகள் சேகரிப்பவர்கள், மறுசுழற்சி பொருள்களை பெறுபவர்களிடம் ஒப்படைத்தல்.

ix) திடக்கழவு மேலாண்மைப்பணிகளை மேம்படுத்த பயனர் கட்டணத்தை உள்ளாட்சி அமைப்பில் நேரடியாகவோ அல்லது உள்ளாட்சி அமைப்பால் அங்கீகாரம் பெற்ற நபர்கள் அல்லது முறைமையிடமோ வழங்குதல்.

(y) விதி 23ல் குறிப்பிடப்பட்டிருக்கும் கால அளவிற்கு சுகாதார நில மேம்படுத்துதல் செயலாக்கத்திற்கு பிறகு நிலத்தில் குப்பைகளை கொட்டுவது, கலப்பு கழிவுகளை கொட்டுவது ஆகியவை நிறுத்தப்படவேண்டும்.

(z) பயன்படுத்த இயலாத, மறுசுழற்சி செய்ய இயலாத, மக்காத தன்மையுடைய எரியும் தன்மை இல்லாத எதிர் வினை புரியாத மந்த கழிவு செயலாக்கத்தால் நிராகரிக்கப்படுகின்ற, கழிவுகள் மட்டுமே தொழிற்னுட்ப தகுதி பெற்ற சுகாதார நில அமைப்பிற்குள் அனுமதிக்கப்படவேண்டும். பூஜ்ய கழிவு சுகாதார நிலத்திற்குள் போகிறது என்ற நோக்கத்தை அடைய முடிந்த வரை மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு மேற்கொள்ளப்பட்டு எஞ்சியவை சுகாதார நிலத்திற்கு அனுமதிக்க வேண்டும்.

(za) பழைய திறந்த உரக்கிடங்குகள், குப்பை கொட்டும் இடங்கள், தற்பொழுது பயன்பாட்டில் உள்ள உரக்கிடங்குகள் ஆகியவற்றை விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டு பயோமைனிங (உயிர் சுரஙகம்) அல்லது பயோரிமெடியேசன்( உயிர் சரிசெய்தல்) செய்யக்குடிய சாத்தியக்குறுகளை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(zb) உயிர் சுரஙக அல்லது உயிர் சரிசெய்தல் சாத்தியம் இல்லாத உரகிடஙகுகளை அறிவுப்பூர்வமாக சுற்றுச்சூழலிருந்து பாதிப்பு ஏற்படா வகையில் விதிமுறைகளின் படி உறைநிலை மூடி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**6.0** பட்டுக்கோட்டை நகராட்சியின் கட்டாயப் பொறுப்புகள்:–

சில தனிப்பட்ட சூழல்களின் இயல்பை மனத்தில் கொண்டு கீழ்க்கண்ட பொறுப்புகள் குறிப்பாகக் கட்டளை ஆக்கப்பட்டுள்ளன.

6(1) குடிமக்கள் ஆதார அடித்தளம்:– கழிவை மறுசுழற்சி செய்ய மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரும் பொருட்டு பட்டுக்கோட்டை நகராட்சியால் நியமிக்கப்பட்ட அதிகாரி பட்டுக்கோட்டை நகராட்சி பதிவுபெற்ற உரமாக்கும் வல்லுநர், உரிமம் பெற்ற உடைசல் வணிகர், மறு சுழற்சிக் கொள்கலன்வணிகர், குப்பைத் தொட்டி உருவாக்குவோர், மறு சுழற்சி சிறப்புத் தன்மை கொண்ட முகமை போன்றபட்டியலைத் தயாரித்து வெளியிட வேண்டும். செயல்முறை தொடர்பாகப் பயிற்சி / வழிகாட்டுதல் மற்றும் உதவி அளிக்கும் அலுவலர், பதிவு பெற்றவர்கள் / அமைப்புகள் ஆகியோரின் பெயர்களும்

தொலைபேசிஎண்களும் அளிக்க வேண்டும் இந்த விவரம் பட்டுக்கோட்டை நகராட்சியின் இணைய தளத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

6(2) நகராட்சி திடக்கழிவு (SWM) பணிக்காகப் பயனர் கட்டணம் தொழில் கழிவுக் கட்டணம் :– பட்டுக்கோட்டை நகராட்சியின் 31.01.2017ம் நாளிட்ட மன்றம் தீர்மானம் எண்.31 பயனர் கட்டண அட்டவணைப்படி (அட்டவணை –I)திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் நடவடிக்கை மற்றும் பராமரிப்புச் செலவை ஈடுகட்டும் பொருட்டு திடக்கழிவு மேலாண்மை பணிக்காகப் பயனர் கட்டணம் விதிக்க வேண்டும் எனவும் கழிவு உருவாக்கும் பொதுமக்களிடமிருந்து அதைப் பெறவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது. பட்டுக்கோட்டை நகராட்சி தங்கும் விடுதி,உணவகம், பிற கழிவு உருவாக்குவோர் ஆகியோருக்குப் பொருந்தும் தொழில் கழிவுக் கட்டணத்தையும் அதனைக் கழிவின் அளவுடன் இணைத்து, திடக்கழிவு உருவாக்குவோருக்கு ஏதாவது உரிமம் வழங்கி இருந்தால் உரிமக்கட்டணம் விதித்து ஒழுங்குபடுத்தும் இவ்வாறான தகவல்கள் சுகாதாரப்பிரிவு அலுவலகங்களிலும் பட்டுக்கோட்டை நகராட்சி இணையதளத்திலும் கிடைக்கும்.

6(3) வழிபாட்டு இடங்கள், இறுதிச்சடங்கு ஆகியவற்றில் உருவாகும் உயிரி மக்கும் குப்பை சிறப்புக் கொள்கலன்கள் அல்லது ‘‘சமுதாயக் கழிவு சேகரிக்கும் தொட்டிகள்’’ – இல் அறிவித்தவாறு கடற்கரை, ஏரி,குளம் போன்ற நீர்நிலைகள் அருகில் குறிப்பிட்ட சில இடங்களில் பூக்கள், இலைகள், பழங்கள் போன்ற உயிரிமக்கும் குப்பை பெறுவதற்கு ஒவ்வொரு வார்டிலும் பட்டுக்கோட்டை நகராட்சியால் நியமிக்கப்பட்ட அதிகாரி தாமே மேற்கொள்ள வேண்டும் அல்லது விருப்பமுள்ள அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டும். இவ்வாறான கொள்கலனில் பெற்றதொகுப்பை பொருத்தமான இடத்தில் உரமாக்க வேண்டும். கொள்கலன்கள் உரமாக்கும் அலகுகள்,ஆகியன இந்நோக்கத்திற்குத் தகுந்த ஆள்களைப் பெற்றிருக்க வேண்டும்.

6(4) நேர அட்டவணையும் பெறுதல் செல்வழியும் : i) உயிரி – மக்கும் கழிவு, ii) மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவு, iii) வீட்டு அபாயகரமான கழிவு என்பன போன்ற பல்வேறு வகை ஆளுறு கழிவுகளை நாள்தோறும் மற்றும் வாரந்தோறும் பெறும் நேரம் மற்றும் செல்வழிகள் ஆகியவற்றை உறுதி செய்து அவற்றை முன்கூட்டியே தங்கள் வார்டு அலுவலகம் ஒவ்வொன்றிலும் தொடர்புடைய பொறுப்பு அலுவலர் தெரியப்படுத்த வேண்டும். கழிவுகளைப் பெறுதலில் நேர அட்டவணை செல்வழி ஆகியவற்றில் ஏதாவது மாற்றம் இருந்தால் வார்டு அலுவலகம் ஒவ்வொன்றிலும் தொடர்புடைய பொறுப்பு அலுவலர் தெரியப்படுத்த வேண்டும். இந்த விவரம் அனைத்து வார்டு அலுவலகங்களிலும் பட்டுக்கோட்டை நகராட்சி இணைய தளத்திலும்

தெரியப்படுத்த வேண்டும். இதைப் போலவே பட்டுக்கோட்டை நகராட்சி அல்லது அதன் அதிகாரம் பெற்ற முகமைகள் கட்டுமானம் மற்றும் இடித்தல் கழிவு, தோட்டம் மற்றும் தோட்டக்கலை கழிவு ஆகியவற்றைப் பெறும் ஏற்பாடுகளையும் பொதுமக்களுககும் பெருமளவு கழிவு உருவாக்குவோருக்கும் நியமிக்கப்பட்ட தொடர்புடைய பொறுப்பு அலுவலர் தெரியப்படுத்த வேண்டும்.

6(5) எதிர்பாரா ஆய்வு : ஆணையாளர் அல்லது ஆணையாளர் நியமனம் செய்த வேறு அதிகாரி இணக்கம் ஏற்படுவதை ஊக்குவிப்பதற்காக நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பல்வேறு வார்டுகளில் எந்நேரத்திலும் (இரவு அல்லது பகல்) எதிர்பாரா ஆய்வு மேற்கொள்வார். விதிமீறுதல் இருந்தால் தண்டம் கட்ட வேண்டி இருக்கும். இந்த ஆய்வுகளில் குப்பை ஏதாவது இருப்பதைக் கண்டறிந்தால் அதை பட்டுக்கோட்டை நகராட்சி அகற்ற வேண்டும்.

6(6) ஒவ்வொரு வார்டிலும் நடைமுறைப்படுத்தும் குழு : திடக்கழிவு மேலாண்மை பணி சேவைக்காக பட்டுக்கோட்டை நகராட்சி தொல்லை கண்டறிபவரை அமர்த்த வேண்டும். நடைமுறைப்படுத்தும் குழு உருவாக்க வேண்டும். பட்டுக்கோட்டை நகராட்சியால் நியமிக்கப்பட்ட அதிகாரி தொல்லை கண்டறிபவர், நடைமுறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மேற்பார்வை செய்வார்.

6(7) விளம்பரம், மக்கள் தகவல் மையம் : பட்டுக்கோட்டை நகராட்சி துணை விதிகளின் கருத்துக்களை, விளம்பரம், துண்டு அறிக்கை, வானொலி தொலைக்காட்சி ஆகியவற்றில் அறிவிப்பு, இதழ்களில் கட்டுரை மற்றும் பிற தக்க வழிமுறையில் ஊடகம் வழி பரப்பலாம். அதனால் பொது மக்கள் அனைவருக்கும் சட்டக் கடமைகள், மற்றும் தென்காசி நகராட்சி இன் மறுசுழற்சி,கழிவு மற்றும் குப்பைச் சேர்வதற்கு எதிரான சேவைகள் மற்றும் அபராதம் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

6(8) அரசு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு : பட்டுக்கோட்டை நகராட்சி பிற அரசு முகமைகளுடனும் அதிகார அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து தஙகள் அதிகாரத்தின் கீழே உள்ள பகுதியில் அல்லது இவ்வகை அமைப்புகள் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் இந்தத் துணைவிதிகளை இணக்கமாக உறுதிபடுத்த வேண்டும்.

6(9) திடக்கழிவு மேலாண்மைக்காக ஆணையாளர் மற்றும் நியமன அலுவலர் சேரி தத்தெடுத்தல் திட்டத்தைத் வார்டுகளுக்கு உட்பட்ட திடக்கழிவு மேலாண்மை பணி இதுவரை கொண்டு செல்லாத பகுதிகளுக்கு, எஙகெல்லாம் தகுதிவாய்ந்த சமுதாயஅடிப்படையிலான அமைப்புகள் (CBO/ அரசு சாரா அமைப்புகள் (NGO / தன்னார்வ தொண்டு அமைப்புகள்(VSO/முன்னுக்கு வருகின்றனவோ அங்கு நீட்டிக்க

வேண்டும். CBOகள்/NGOகள்/VSOகள் அடையாளம் காண்பதற்கு வாய்ப்பில்லை என்றால் மாவட்ட ஆட்சியாளர் அங்கீகாரம் அளித்த சுய உதவிக்குழுவை உட்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

6(10) பட்டுக்கோட்டை நகராட்சியால் தூய்மையைத் தூண்டுவது வார்டு உறுப்பினர்கள், மக்கள் அமைப்புகள், அரசுக் குழுமம், பெருநிறுவனங்கள் அவ்வப்போது சேரிப்பகுதித் தூய்மைக்கும் CBOகள் உடன் சேர்ந்து சேரி தத்தெடுத்தல் திட்டத்தில் பஙகேற்கும் NGO கள் ஆகியனவற்றுடன் சேர்ந்து நடத்தப்படும்.

7.0 வளர்ப்புப் பறவை, மீன், இறைச்சிக்கொட்டில் கழிவு (நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில், சந்தைகள் தவிர்த்து மற்ற எல்லா பகுதியிருந்தும்)

7.1 நியமிக்கப்பட்ட இறைச்சிக் கொட்டில்களும் சந்தைகளும் தவிர வணிகச் செயல்பாடுகள் விளைவாக வளர்ப்புப்பறவை, மீன், இறைச்சிக் கொட்டில் கழிவுகள் ஏற்படுத்தும் வளாகஙகளின் உரிமையாளர்/தஙகியிருப்போர் கழிவுகளை தனித்தனியாக மூடியவகையில் சுகாதார தன்மையுடன் சேர்த்து நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் இதற்காக அளிக்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை நகராட்சியின் பெறுதல் வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். இவ்வகைக் கழிவுகளைச் சமுதாய கழிவுத் தொட்டியில் கொட்ட தடை உள்ளது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

7.2 விற்பனையாளர்/கூவி விற்போர் :

விற்பனையாளர்/ கூவி விற்போர் அனைவரும் தஙகள் விற்பனை செயல்பாடுகளால் கழிவு ஏதாவது உருவானால். உயிரி மக்கும் மற்றும் பிற கழிவுகளை ஒன்று சேர்க்காமல் போட கொள்கலன் / தொட்டியை விற்பனை செய்யும் இடத்தில் வைக்க வேண்டும். கழிவுகளைச் சரியாகப் பிரித்து கொள்கலன் பொருந்திய கைவண்டியில் அல்லது அருகிலுள்ள சமூகக் கழிவு சேகரிப்புத் தொட்டியில் ஒப்படைக்க வேண்டியது கழிவு உருவாக்குவோர் / விற்பனையாளர் பொறுப்பு ஆகும். இவ்வாறு செய்யவிலை என்றால் அபராத அட்டவணையின்படி தண்டம் கட்ட வேண்டி வரும். விற்பனையாளர் / கூவிவிற்போர் அனைவரும் தஙகள் இடத்தைச் சுற்றியுள்ள பகுதியைத் தூய்மையாக வைக்க வேண்டியது தஙகள் பொறுப்பு ஆகும்.

7.3 வீட்டு நீர்க்கால்:–

7.3.1 உரிமையாளர் / தஙகியிருப்போர் தன் / தம் வளாகஙகளின் வீட்டு நீர்க்காலில் கழிவு எதுவும் குவிக்கப் படாமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டியதும் ,குப்பையைப் பிரித்து பட்டுக்கோட்டை நகராட்சி அல்லது முகமையால் அளிக்கப்படும் கழிவு

சேகரிக்கும் வாகனத்தில் ஒப்படைப்பதும் தங்கள் பொறுப்பாகும். இவ்வாறு செய்ய தவறுவது அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

7.4 சொந்த/ செல்ல விலஙகால் ஏற்படும் குப்பை:

தெருவில் அல்லது பொது இடஙகளில் வளர்ப்பு விலஙகுகளை அலைந்து திரியவிடக்கூடாது.மேலும் தெருவில் அல்லது பொது இடஙகளில் வளர்ப்பு விலஙகால் ஏற்படும் கழிவை வழித்தெடுத்தல் /தூய்மையாக்கல் உரிமையாளரின் பொறுப்பு ஆகும். இவ்வகைக் கழிவைச் சரியாக அப்புறப் படுத்த தஙகள் சொந்த கழிவுநீர் அமைப்பால் போதுமான அளவு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய தவறினால் அபராத அட்டவணைப்படி தண்டம் கட்ட வேண்டி வரும்.

8.0 இந்தத் துணை விதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்

8.1 இந்தத் துணை விதிகள் தொடஙகிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 30 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை–1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

8.2 துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை –1 ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன்/அவள்–க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

9.0 தண்டனை

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின்அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

10.0 மேல் முறையீட்டிற்கு உரிமை

பட்டுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துணைவிதிகள் 2016 ஆல் இடர் உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத் துணை விதிகள் பட்டுக்கோட்டை நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்ற பின் நடைமுறைக்கு வந்துள்ளன.

ஆணையர்

பட்டுக்கோட்டை நகராட்சி

## அட்டவனை–I

| வ.எண். | பொருள் | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| **1. குடியிருப்பு** | | | |
| 1. | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குல்) | மாதம் ஒன்றுக்கு | 10.00 |
| 2. | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.501–1000 க்குல்) | மாதம் ஒன்றுக்கு | 20.00 |
| 3. | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001–2000 க்குல்) | மாதம் ஒன்றுக்கு | 30.00 |
| 4. | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்) | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| **2. நிறுவனம்** | | | |
| 1. | தனியார் பள்ளி/கல்லூாி விடுதி/தனியார் அலுவலக வளாகம். | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| **3. வணிகம்** | | | |
| 1. | டீ ஸ்டால் / சிற்றுண்டி (சிறியது) | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 2. | டீ ஸ்டால் / சிற்றுண்டி (பெரியது) | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 3. | நடமாடும் உணவகம் | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 4. | உணவகம் சிறியது | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 5. | உணவகம் பெரியது ( வணிகவளாகம் உருவாகும் கழிவு 3 **டன் கீழ்)** | மாதம் ஒன்றுக்கு | 750.00 |
| 6. | உணவகம் பெரியது ( வணிகவளாகம் உருவாகும் கழிவு 3 **டன் மேல்)** | மாதம் ஒன்றுக்கு | 2000.00 |
| 7. | திருமணமண்டபம் சிறியது | மாதம் ஒன்றுக்கு | 750.00 |

| | | | |
|---|---|---|---|
| 8. | திருமணமண்டபம் பெரியது | மாதம் ஒன்றுக்கு | 1000.00 |
| 9. | சிறிய மீன்/மட்டன் ஸ்டால் / சிக்கன் ஸ்டால் | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 10. | பலசரக்கு கடை மற்றும் இதர பல்பொருள் அங்காடி | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 11. | சினிமா தியேட்டர் மற்றும் பொழுதுபோக்கு மையம் | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 12. | காய்கறிகள்வியாபாரம் | மாதம் ஒன்றுக்கு | 300.00 |
| 13. | ஆடு வதை கூடம் | மாதம் ஒன்றுக்கு | 2000.00 |
| 14. | டெக்ஸ்டைல்ஸ் நிறுவனக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1500.00 |
| 15. | தோல் நிறுவனக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1500.00 |
| 16. | அனைத்து சிறு தொழில் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 1000.00 |
| 17. | இருசக்கர வாகனங்கள் ஒர்க் ஷாப் | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 18. | நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் ஒர்க் ஷாப் | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 19. | ஓடுகள், பளிங்கு கற்கள் போன்றவை விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 20. | பர்னிச்சர், மரச்சாமான்கள் மற்றும் டிம்பர்ஸ் | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 21. | துணிக்கடை சிறியது | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 22. | துணிக்கடை பெரியது | மாதம் ஒன்றுக்கு | 200.00 |
| 23. | அச்சகங்கள் மற்றும் காகிதப் பொருட்கள் விற்பனை | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| | | | |
| **4. அகற்றப்பட்ட கழிவுகள்** | | | |
| 1. | மரக்கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 500.00 |
| 2. | தோட்டக்கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 500.00 |
| 3. | கட்டடக் கழிவுகள் | லாரி லோடு ஒன்றுக்கு | 750.00 |
| 5. **மற்றவை** | | | |
| 1. | மருத்துக்கடை | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 2. | மளிகை கடை சிறியது | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 3. | மளிகை கடை பெரியது | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 4. | மருத்துவமனை(படுக்கையுடன்) | மாதம் ஒன்றுக்கு | 500.00 |
| 5. | **காய்கள் கனிகள் மற்றும் பூக்கடை (சிறியது)** | மாதம் ஒன்றுக்கு | 50.00 |

| | | | |
|---|---|---|---|
| 6. | **காய்கள் கனிகள் மற்றும் பூக்கடை (பெரியது)** | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 7. | மதுப்பானக்கடை பார் | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 8. | பிளா**ஸ்டிக் கடை (சிறியது)** | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 9. | பிளா**ஸ்டிக் கடை (பெரியது)** | மாதம் ஒன்றுக்கு | 100.00 |
| 10. | பழைய சாமான்கள் சேகரித்தல் சிறியது | மாதம் ஒன்றுக்கு | 50.00 |
| 11. | பழைய சாமான்கள் சேகரித்தல் பெரியது | மாதம் ஒன்றுக்கு | 100.00 |

1. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன்படி, பட்டுக்கோட்டை நகராட்சி சுற்றுச் சூழலுக்கு எதிராக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.
2. துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள, செய்யக்கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக அட்டவனை IV –இல் கண்டவாறு அபராதம் வசூலிக்கப்படும்.
3. தொடர் குற்றங்களுக்கு தினசரி ரூ.100– வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்
4. மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகராட்சி மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



## அட்டவனை–II

### மக்கும் கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் விளக்கப்பட்டியல்

| உயிரி மக்கும் கழிவு | மறுசுழற்சி செய்யத்தக்க கழிவு |
|---|---|
| மக்கும் கழிவு என்பதன் பொருள் பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படும் கழிவாகும். இதை ஈரக்கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. மக்கும் கழிவு முழுமையாக தாவரம் அல்லது விலங்கு மூலங்களிலிருந்து உருவாகும் ஒருவகை கழிவாகும். | மறு சுழற்சி செய்யத்தக்க கழிவு என்பது பொதுவாக நகராட்சி குப்பையில் காணப்படுவதாகும். இது உலர் கழிவு எனவும் அழைக்கப்படுகிறது. இதை ஒரு செயல் முறையில் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கு வேண்டிய மூலப் பொருட்களாக மாற்ற முடியும். புதிய அப்பொருட்கள் அசல் பொருட்கள் போல இருக்கலாம். அவ்வாறு இல்லாமலும் |

| | |
|---|---|
| | இருக்கலாம். |
| • டீ இலைகள், முட்டை ஓடுகள், பழம், காய்கறித் தோல்கள் மற்றும் பயன்படாதென விடுபவை உள்ளிட்ட சமையலறைக் கழிவுகள்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• மலர்கள் உட்பட தோட்டக்குப்பை மற்றும் இலைக்குப்பை<br>• விலங்கு குப்பை<br>• பழுதடைந்த காகிதம்<br>• தேங்காய் ஓடு<br>• சாம்பல் | • செய்திதாள்கள்<br>• தாள், புத்தகம் மற்றும் இதழ்கள்<br>• கண்ணாடி<br>• உலோகப்பொருட்கள், கம்பி<br>• நெகிழி (Plastic)<br>• கந்தல் துணி<br>• தோல்<br>• ரெக்சின் (rexine)<br>• தொய்வை ( rubber)<br>• மரம் / அறைகலன்<br>• மூட்டை கட்டல் |

# அட்டவனை–III

## வீட்டு அபாயகரமான கழிவு பட்டியல்

- ஏரோசல் டப்பா (Aerosol cans)
- மின்வெட்டொளி விளக்கின் மின்கலப்பெட்டியும் பட்டன் செல்லும்.
- நிறம் நீக்கி மற்றும் வீட்டு சமையலறையும், வடிகாலையும் தூய்மை செய்யும் பொருட்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- சீருந்து மின்கலப்பெட்டிகள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் சீருந்து பராமரிப்பு பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள், வேதிய பொருட்கள் மற்றும் கரைப்பான்கள் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒப்பனை பொருட்கள் இராசாயன அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- ஒளி விளக்குகள், குழாய் விளக்குகள் மற்றும் அடர்த்தியான ஒளிர் விளக்குகளை (CFL) வேண்டாமென்று விலக்கிய மருந்துகள் மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- வண்ணப்பூச்சு, எண்ணெய்கள், உயவுப் பொருட்கள் (lubricants) வஜ்ரபசைகள் (glues) நீர்மமாக்கிகள் (Thinners) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- பூச்சிக்கொல்லிகள் மற்றும் கலைக் கொல்லிகள் அவற்றின் வெற்று கொள்கலன்கள்
- புகைப்பட ஆடியோ / வீடியோ நாடாக்கள் ( Tabers) மற்றும் இவற்றின் கொள்கலன்கள்.
- இராசாயனப் பொருட்கள் மெத்து (Styrofoam) மற்றும் அறைகலன்களை சிப்பம் கட்டும் மென்மையான மெத்துகள்
- மூட்டை கட்டும் கருவிகள், வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள்.
- தனியாள் கணினிகள், தொலைபேசிகள், எம்பி3 இயக்கிகள், ஆடியோ சாதனங்கள், தொலைக்காட்சி பெட்டிகள், கனிப்புப்பொறி, ஜி.பி.எஸ் (GPS) தானியங்கி மின்னணு, டிஜிட்டல் படி பெட்டிகள், தானாக ஒளியை இயக்கும் கருவிகளும் மற்றும் டிவிடி (DVD)கள், வி.சி.ஆர் (VCR) கள் அல்லது கேம்கோடா போன்ற வீடியோ ஊடகத்தைப்பயன்படுத்தி ஒளி இயக்கும் கருவிகள் மற்றும் பதிப்பான்கள் முதலிய மின்கழிவுகள்.

# அட்டவணை–IV

## அபராதப் பட்டியல்

| வ.எண். | துணை விதிகள் விளக்கம் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பொது இடத்தில், தனியார் சொத்தில் வண்டியிலிருந்து குப்பைகளை எறிதல், கடைகளிலிருந்து / வணிக நிறுவனங்களிலிருந்து குப்பைகளை எறிதல் | 200 |
| 2 | **திடக்கழிவுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை** | |
| | அ) குடியிருப்புகள் | 100 |
| | ஆ)அடுக்குமாடி குடியிருப்புகள் /காலணிகள் | 500 |
| | இ) அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Generators) | 1000 |
| 3) | கட்டுமான கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை உரிய முறைப்படி பிரித்து வழங்காமை | 2000 |
| 4) | தோட்டக்கழிவை, மரக்கழிவை குறிப்பிட்ட வகையில் இல்லாமல் ஒப்படைத்தல் | 500 |
| 5) | சமூக குப்பை ஒருங்கு சேர்த்தல் தொட்டிக்கு வெளியே அல்லது ஒதுக்கப்படாத பகுதியில் குப்பை கொட்டுதல் | 500 |
| 6) | **கழிவுகளை எரித்தல்** | |
| | அ) தனியார் தன் வளாகத்திற்குள் | 200 |
| | ஆ) தனியார் பொது இடத்தில் | 500 |
| | இ) நிறுவனங்கள் , வணிக நிறுவனம் | 2000 |
| 7) | மீன், வளர்ப்பு பறவை, இறைச்சி ஆகியவற்றின் கழிவை (வீட்டில் உருவானது அல்லாதது) குறிப்பிட்ட வகையில் பிரித்து ஒருங்கு சேர்த்தல் செய்யாமல் ஒப்படைத்தல் | 1000 |
| 8) | கொள்கலம் / குப்பைக்கூடை இல்லாத விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு | 200 |
| 9) | குறிப்பிட்ட வகையில் கழிவை பிரிக்காமல் ஒப்படைக்கும் விற்பனையாளருக்கு / கூவி விற்பவருக்கு | 200 |
| 10) | பொதுக்கூட்டம் / நிகழ்ச்சிக்கு பின் தூய்மை வைப்புத்தொகை 24 மணி நேரத்திற்குள் பறிமுதல் ஆவதுடன் தூய்மைப்படுத்தாமல் இருப்பதற்கு அபராதம் | 1000 |

இச்செயல்பாடுகள் அனைத்தும் 01–04–2017 முதல் அமுலுக்கு வருகிறது.

பொதுமக்கள் தங்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகளை இவ்விறிவிப்பினை வெளியிட்ட 30 தினங்களுக்குள் ஆணையாளர், பட்டுக்கோட்டை நகராட்சி அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இடம்: பட்டுக்கோட்டை
நாள் : 31.01.2017

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

---

/ஒப்புதல் அளிக்கப்பட்டது/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

## படிவம்–அ

### திடக்கழிவு சேவைக் கட்டணம் செலுத்துவதற்கான விண்ணப்பம்

அனுப்புநர்
--------------
--------------
--------------

பெறுநர்
நகராட்சி ஆணையர்,
பட்டுக்கோட்டை நகராட்சி,
பட்டுக்கோட்டை– 614601

ஐயா,

மேல் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தில் ---------------------------------------- தொழில் செய்து வருபவராகிய நான் / நாங்கள் எனது / எங்களது கடை / உணவகம் / ------------ ------------------------------------------------ உபயோகத்தினால் ஏற்படும் திடக்கழிவுகளை பிரித்து நகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதிக்கிறேன் என்றும் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சேவைக் கட்டணமான ரூ. ------------------ (ரூபாய். ----------------------------------------------) செலுத்த இதன்மூலம் சம்மதிக்கிறேன்.

நான் / நாங்கள் எனது / எங்களது நிறுவனத்தினை மேற்படி விலாசத்திலிருந்து மாற்றும் பட்சத்தில் எழுத்து வாயிலாக நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 30 நாட்கள் முன்னதாக அறிவிப்பு ஒன்றின் மூலம் தெரிவித்து மேற்படி விலாசத்தில் செலுத்தி வந்த திடக்கழிவு அப்புறவு படுத்துவதற்கான சேவை கட்டணத்தை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள முறையாக தெரிவிப்பேன் என ஒப்புக் கொள்கிறேன்.

இப்படிக்கு
விண்ணப்பதாரர்